RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பசுவுக்கான வீட்டு மருத்துவம்

**ஆ.பா. இராமலெட்சுமி [அ *]**

[அ] தமிழ்த்துறை, தென்திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு இந்தியா

# Traditional Veterinary Practices for Cattle in Rural Tamil Society

**A.P. Ramalekshmi [a, *]**

[a] Department of Tamil, S. T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India

*Corresponding Author:
ramsundarav08@gmail.com

**ABSTRACT**

Among domesticated animals, the cow is widely regarded as one of the most gentle and nurturing creatures, symbolizing motherhood, prosperity, and compassion. In rural Tamil society, cows occupy a place of immense cultural, economic, and agricultural significance. They are not only valued for their contribution to farming and dairy production but are also revered as symbols of divine protection and household prosperity. Owing to the strong emotional bond between cattle and their owners, cows are considered integral members of the family and an indispensable part of the agrarian way of life. When cattle become ill, rural communities have traditionally relied on their keen observation of changes in the animals' behaviour, appetite, movement, and physical condition to identify health problems. Based on this indigenous knowledge, generations of livestock keepers have developed a range of home-based remedies using locally available medicinal plants, herbs, and natural ingredients. These ethnoveterinary practices have been transmitted orally from one generation to another and continue to be employed in many villages as cost-effective and accessible methods of primary animal healthcare. This article examines the traditional home remedies used for treating cattle, highlighting the indigenous veterinary knowledge preserved in rural Tamil communities. The study explores the cultural foundations, practical applications, and continuing relevance of these ethnoveterinary practices, emphasizing their importance in sustainable livestock management and the preservation of traditional knowledge systems.

**Keywords:** Traditional Knowledge Systems, Rural Tamil society, Cattle, Traditional Home Remedies

## முன்னுரை

ஐந்தறிவு படைத்த விலங்குகளில் மிகவும் மென்மையான தாய்மைப்பண்பு கொண்ட உயிரினங்களில் பசுவை சொல்லலாம். தன்னை வளர்க்கும் உடையக்காரர்களிடம் பேரன்பு கொண்டதாகவும், அந்த வீட்டிற்கு எந்த ஆபத்தும் வராத வண்ணம் காப்பாற்றும் தெய்வத்தின் அடையாளமாகவும், வேளாண்மை தொழிலுக்கும், செல்வத்திற்கு அதிபதியாகவும் கிராமப்புற மக்களின் வாழ்வியலில் அசைக்க முடியாத இடத்தைப் பெறுகிறது. அப்படிப்பட்ட உயிரினமான பசுவுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் அவற்றின் செயல்பாடுகளின் மாறுதல்களைக் கொண்டு சில வீட்டு வைத்தியங்களை இன்றளவும் நம்முன்னோர்கள் செய்து வருகின்றனர்.

## சூட்டு நோய்

பசுக்கள் பகல் பொழுது முழுவதும் மேய்ச்சல் காரணமாக வெயிலிலேயே சுற்றித் திரிவதால் அவைகளுக்கு வாய் பகுதி மற்றும் கால்களில் அடிக்கடி நோய் ஏற்படுகிறது. அவ்வாறு நோய்வாய்ப்பட்ட மாட்டின் உமிழ்நீர் எப்பொழுதும் போல் அல்லாது கெட்டியானச் சளியுடன் இருந்தால் வீட்டிலுள்ள சின்ன உள்ளி, உளுந்து, வெந்தயம் இம்மூன்றையும் வேக வைத்து உருட்டி கொடுப்பதோடு பேயன்பழத்தையும் (நாட்டு வாழைப்பழம்) கொடுக்கின்றனர். கால்களில் ஏற்பட்ட புண்ணில் பன்றி நெய்யினைத் தடவுகின்றனர். இவ்வகையான மருந்துகள் மாட்டிற்கு உடல் குளிர்ச்சியைத் தந்து சூட்டைப் போக்கிக் குணப்படுத்துகின்றன.

## ஆகாரம் (உணவு) சீரணிக்க

பசுவிற்கு நீராகாரமாகிய கழநீர் நல்லது என்கின்றனர். புல், வைக்கோல், புண்ணாக்கு வகைகளில் எள் புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு, கோதுமை தவிடு, பருத்திக் கொட்டை முதலிய திட உணவுகளும் அவைகளுக்கு சீரணமாகக் கூடியவை. பசுக்களுக்கு, நாளொன்றுக்கு 40 முதல் 50 கிலோ வரை உணவுகள் அளிக்கப் படவேண்டும்.

சிலவேளைகளில், மக்கள் அரிசி உணவினையோ (சாதம்), பாயசம் கலந்த உணவினையோ பசுக்களுக்கு அளிக்கும் போது சீரணமாகாது மந்தமாக காணப்பட்டால் ஓமம், வெள்ளைப்பூண்டு, காயம் முதலானவற்றை நன்கு மையாக அரைத்து மாட்டின் உடையக்காரர் (சொந்தக்காரர்) பசுவின் நாக்கினை இடக்கையால் வெளியில் இழுத்து அம்மருந்தினை தொண்டை வரை கைவிட்டு மாட்டின் கழுத்தினை உயர்த்தி மிகலாவகமாகக் கொடுக்கின்றனர். மிகக்கவனமாகக் கொடுக்கவில்லை என்றால் பசுக்கள், அம்மருந்தினை வெளித்தள்ளிவிடும் அல்லது நாசி வழியாக புரையேறிவிடும் என்பதற்காக மூங்கில் குச்சியால் செய்த "கொட்டம்" என்ற கருவியின் மூலம் இம்மருந்தினைக் கொடுக்கின்றனர்.

## காய்ச்சல்

பசுக்களின் காதுகளுக்குப் பின்புறம் அல்லது கொம்புகளுக்கிடையே நம் கை வைத்து பார்க்கும் போது சூடாக இருந்தாலோ அல்லது பசுக்கள் முகச்சோர்வுடன் அசை போடாமல் இருந்தால் பசுக்களுக்குக் காய்ச்சல் இருப்பதாகக் கண்டறிகின்றனர். காய்ச்சலுக்கு கைமருத்துவம் செய்யாது மருத்துவர்களின் ஆலோசனைப்படி மருந்தளிப்பதாகக் கூறுகின்றனர்.

## நாவரணை

பசுக்களுக்கு, நம் நாக்கினைப் போல் வழவழப்பான தன்மையில்லாமல் சற்று தடிமனாகவும் சொரசொரப்பாகவும் (முள் போன்று) காணப்படும். நாவரணை நோய்வரின், பசுக்களின் நாவில் முள் போன்ற பகுதிகள் சற்று பெரியதாக அல்லது தடிமனாகவும் காணப்படும். அவற்றை நம் கை வைத்து தடவிப் பார்த்து உணரலாமென கூறுகின்றனர். அச்சமயம், உப்பையும் புளியையும் பிசைந்து நாவில் தடவிக் கொடுப்பர். இம்மருந்தின் மூலம் நாவிலுள்ள தடிமனான முற்கள் பொங்கி இளகி விழுந்து விடும். அவ்வாறு விழாதிருப்பின், மாட்டை வளர்ப்பவர்கள் தங்களது நகத்தை வைத்து அம்முற்களை மெதுவாக எடுத்து விடுவார்கள்.

## கிருமிக்கான சிகிச்சை

தாய் மாட்டின் கர்ப்பப்பையில் கிருமிகள் இருந்தால், அவற்றின் பிறப்புறுப்பில் வேப்பெண்ணெய் தடவி விடுவதாகவும், கன்றுக்குட்டிக்கு கிருமிகள் இருந்தால் வேம்பின் இலை, மஞ்சள், காயம் ஆகியவற்றை அம்மியில் அரைத்து இளஞ்சூடான நீரில் கலந்து கொடுப்பார்கள். எருமைக் கன்றுகளுக்கு மிக வேகமாக கிருமிகள் பற்றிக்கொள்வதாகக் (பரவுவதாக) கூறுகின்றனர். அச்சமயம் பாகற்காய் இலை

மற்றும் பால்காயம் ஆகியவற்றை அரைத்துக் கொடுக்கின்றனர். கிருமிகள் இருப்பதை, மாடுகள் சோர்வுடன் இருப்பதிலிருந்தும் அசைபோடாமல் இருப்பதிலிருந்து கண்டறிக்கின்றனர்.

## மகப்பேறுகாலம்

கன்று ஈனும் மாடானது தீவனம் சரியாக எடுக்காது, சோர்வாகவும், மடிக்காம்புகள் வீக்கத்துடனும் காணப்படும். ஈனுவதற்கு சிலமணி நேரத்தில் மடியிலிருந்து பால் வடிந்து கொண்டிருத்தல், மாடுகள் ஓரிடத்தில் நில்லாது அங்குமிங்கும் அலைந்து கொண்டும் வாலை அடிக்கடி சுழற்றிக் கொண்டிருத்தல் ஆகிய அறிகுறிகள் மூலம் அறிகின்றனர்.

கன்றுக்குட்டி ஈன்றியதும் நஞ்சுக்கொடியினை வெளியில் தள்ளுகின்றனவா என்பதை கவனமாகப் பார்த்துக் கொள்வதோடு மட்டுமல்லாது அக்கொடியினைத் தின்றுவிடாமலும் பார்த்துக் கொள்கின்றனர். இந்நஞ்சினை, நாய், பூனை தின்றுவிடாமலும், காகங்கள் கொத்திக் தின்னாதவாறும் பாதுகாத்து பின்னர் ஒரு பனையோலைப் பெட்டியில் இறுக்க கெட்டி, மஞ்சனத்தி மரத்தின் மேல் கிளைகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் கெட்டித் தொங்கவிடுகின்றனர். இந்நஞ்சினை இம்மரங்கள் முறிக்கப்படுவதாக நம்பப்படுகிறது.

கன்றினை ஈன்ற பின்னர் தாய்ப் பசுவிற்கு நவதானியங்கள் ஊற வைத்து அரைத்து தண்ணீரில் கரைத்து முதல் மூன்று நாட்கள் கொடுக்கின்றனர். அடுத்த மூன்று நாட்கள் எள் புண்ணாக்கு கொடுத்தும், பிறகு பதினைந்து நாட்கள் வயிற்றிலுள்ள கழிவுகள் முற்றிலுமாக வெளியேற பருத்திக் கொட்டையை அரைத்து பாலும் சக்கையுமாகக் கொடுக்கின்றனர். மேலும் நல்லெண்ணெய், மஞ்சள் தேய்த்து சுடுநீரில் குளிப்பாட்டுகின்றனர். பிறப்புறுப்பில் ஈ மொய்க்காமலும், காகம் முதலான பறவைகள் கொத்தி விடாமலிருக்க நல்லெண்ணெயுடன் மஞ்சள் சேர்த்து குழைத்துப் பூசி விட்டு கண்ணும் கருத்துமாக பார்க்கின்றனர்.

மடுக்களில் வீக்கம் ஏற்படும் போது 'சீந்திப் பச்சிலை' என்னும் மூலிகைச் செடியினை அரைத்துப் பூசுகின்றனர். மேலும் சுண்ணாம்பினை (சாக்குட்டி) நீரில் குழைத்துப் பூசுகின்றனர்.

## கர்ப்பகால உணவுகள்

பசுக்களின் பேறு காலம் 283 நாட்கள் (பத்து மாதங்கள்). இக்காலங்களில் அவற்றிற்கு உணவாக

1. புல், வைக்கோல், நீராகாரம் முதலியவற்றை முதல் ஐந்து மாதங்கள் கொடுக்கின்றனர்.

2. ஆறு மாதம் முதல் எட்டு மாதங்கள் வரை ஊற வைத்த முளைகட்டிய பருத்தி விதையினைக் கொடுக்கின்றனர்.

3. கடைசி மாதங்களில் எந்நேரமும் உண்ணும் உணவைக் கொடுக்கிறார்கள்.

## சீம்பால்

கன்று ஈன்ற தாய்ப்பசுவிலிருந்து கறக்கும் முதல் பாலினை பூமாதேவிக்கும் பின்னர் ஓடும் நீரில் கறந்து விட்ட பின்னரே கன்றுக்குட்டியைப் பால் குடிக்க வைக்கின்றனர். இவை ஒருவித கிராம நம்பிக்கையாக இன்றளவும் காணப்படுகிறது. கன்று ஈன்றபின், ஐந்து முதல் ஏழு நாட்களில் வரும் பாலினை சீம்பால் அல்லது 'கடம்பு பால்' என அழைக்கின்றனர். இப்பால் மருத்துவ குணமிக்க ஒன்றாகும். இப்பசும்பாலினை பருகுவதால் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாகவும் ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. கிராமங்களில்மேலும் சீம்பாலினை விலைக்கு கொடுக்க மாட்டார்கள்.

## பஞ்சகவ்யம்

கிராமங்களில் ஒரே பசுவிடமிருந்து எடுக்கப்பட்ட கோமியம், பால், தயிர், வெண்ணெய் மற்றும் நெய் முதலான கலவையே 'பஞ்சகவ்யம்' என அழைக்கின்றனர். இக்கலவை சிறந்த கிருமிநாசினியாகப் பயன்படுகிறது. வீடு மற்றும் ஆலயங்களைத் தூய்மை செய்ய பயன்படுத்துகின்றனர். மேலும் இக்கலவையுடன் சர்க்கரை, இளநீர் சேர்த்து ஊற வைத்து பதினைந்து நாட்களுக்கு பின் உரமாக செடிகளுக்கு அக்கலவையைப் பயன்படுத்துகின்றனர்.

## சாணம்

மாட்டின் சாணமும் சிறந்த கிருமிநாசினியாக பயன்படுவதால் அதிகாலையில் வீட்டு வாசல் தெளிப்பதற்கும், கிராமப்புறங்களில் வீட்டு அடுப்பங்கறைகளில் மொழுவும் பயன்படுத்துகின்றனர். சாணத்தைப் பக்குவப்படுத்தி திருநீறாக கை, மார்பு மற்றும் நெற்றியில் பூசுகின்றனர். திருநீற்றினை நெற்றியில் பூசுவதால் தலைநீரினால் ஏற்படும் தலைவலி, கண்வலி குறைகிறது எனவும் நம்பப்படுகிறது. மேலும் சிலந்தி போன்ற பூச்சிகள் உடலில் படுவதால் ஏற்படும் வீக்கங்கள் மற்றும் அரிப்பு நீங்குவதற்கும் திருநீற்றினைப் பயன்படுத்துகின்றனர்.

## முடிவுரை

பசுக்களின் மருத்துவம் சார்ந்த குறிப்புகளை எடுத்துரைக்க நல்லூர் திருமதி தங்கம்மாள் அவர்கள் தன் பசுக்களை, அவள், இவள் என ஒரு குடும்ப உறுப்பினராகவே (குழந்தைகளாகவே) பாவித்து கூறிய விதமும், சில நோய்களைக் கூறும்போது அவர்களின் கண்ணிலிருந்து நீர் வந்ததையும், பேறு காலத்தைக் குறிப்பிடும்போதும் மெய்சிலிர்த்து பேசிய விதங்களிலிருந்தும், வீட்டில் வளர்க்கும் விலங்குகளிலேயே முதன்மையான அன்பான உயிரினமாக பசுக்கள் போற்றப்படுவதை அறியமுடிகிறது.

## References


தங்கம்மாள் கோலப்பன், நல்லூர்

சொர்ணம் மணி, திருப்பதிசாரம் (மேலூர்)

தவசிக் கோனார், திருப்பதிசாரம் (கீழூர்)



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License